# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## 2014 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

*(2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

*2014, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 33.00** **தபாற் செலவு : ரூபா 20.00**

## 2014 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

[2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.ஓ. 12/2014

## 2010 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2014 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2010 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2010 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 10 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவாக அப் பிரிவின் 10 ஆம் பிரிவை மீள இலக்கமிடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) மீள் இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்னர் பின்வரும் உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(2) தவணை தவறுகையிலுள்ள வரியை அறவிடுவதற்கு உடனடி நடவடிக்கை அவசியமானதென ஆணையாளர் தலைமையதிபதி திருப்திப்படுமிடத்து, அவர் (1) ஆம் உட்பிரிவின் கீழ் வழக்கொன்றைத் தொடர்வதற்குப் பதிலாக இச்சட்டத்தின் 10அ, 10ஆ, 10இ, 10ஈ, 10உ, 10ஊ மற்றும் 10எ என்னும் பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளை எடுக்கலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 10அ, 10ஆ, 10இ, 10ஈ, 10உ, 10ஊ மற்றும் 10எ என்னும் பிரிவுகளை உட்புகுத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய பிரிவுகளை உட்புகுத்துவதுடன் அச்சட்டவாக்கத்தின் 10அ, 10ஆ, 10இ, 10ஈ, 10உ, 10ஊ, மற்றும் 10எ ஆகிய பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

2-PL 008083 -875 (2014/03)

தவணை தவறுகையிலுள்ள வரியை அறவிடுவதற்கு உடனடி நடவடிக்கை அவசியமாகும் சந்தர்ப்பம்.

10அ. (1) ஏதேனும் தவணை தவறுகையிலுள்ள வரியை அறவிடுவதற்கு 10ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஆணையாளர் தலைமையதிபதி தீர்மானிக்குமிடத்து, அவர் அத்தகைய நடவடிக்கை முறைகள் எந்த வரி தொடர்பில் எடுக்கப்பட்டுள்ளனவோ அந்த வரி தொடர்பிலான விபரங்களையும் நடவடிக்கை முறைகளின் தன்மையையும் குறிப்பிட்டு தவணை தவறியவருக்கு அறிவித்தலொன்றை எத்தேதியன்று அவர் அத்தகைய நடவடிக்கைகளை எடுக்கின்றாரோ அத்தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் அத்தவணை தவறியவருக்கு அவர் கொடுத்தல் வேண்டும்.

(2) எந்த வரிமதிப்பீடு அல்லது வரி மதிப்பீடுகள் தொடர்பில் அத்தகைய வரிவிதிக்கப்பட்டுள்ளதோ அந்த வரி மதிப்பீடு அல்லது வரிமதிப்பீடுகளுக்கு எதிராக மேன்முறையீட்டு நடவடிக்கையொன்று இருக்குமிடத்தும் அத்துடன் தவணை தவறியவர் உரிய காலத்துக்குள் அச்சட்டத்தின் கீழ் மேன்முறையீடு செய்யாதவிடத்தும் அவர் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கொடுக்கப்பட்ட அறிவித்தலிலிருந்து முப்பது நாட்களுக்குள்ளாக அவ்வாறு விதிக்கப்பட்ட வரிக்கு எதிராக ஆட்சேபனை எதனையும் செய்யலாமென்பதுடன், ஆணையாளர் தலைமையதிபதியானவர், அத்தகைய ஆட்சேபனையைக் கருத்திற்கெடுத்து அதன் மீதான தனது முடிபைக் கொடுத்தலும் வேண்டும். அம்முடிபானது முற்றானதாதல் வேண்டும் :

ஆயின், சுகவீனம் காரணமாக, இலங்கையின் இல்லாமை காரணமாக, அல்லது வேறு நியாயமான ஏதுக்காக தவணை தவறியவர் (1) ஆம்

உட்பிரிவின் கீழ் அறிவித்தல் வழங்கப்பட்ட திலிருந்து முப்பது நாட்களுக்குள்ளாக ஆட்சேபனை செய்வதிலிருந்து தடைசெய்யப் பட்டுள்ளார் என ஆணையாளர் தலைமையதி பதியானவர், திருப்திப்படுமிடத்து அவர் அத்த கைய ஆட்சேபனைகளை முன்வைப்பதற்கான கால நீடிப்பொன்றை வழங்குதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் எடுக்கப்பட்ட எவை யேனும் நடவடிக்கைகளின் பயனாக அறவிடப்பட்ட வரியானது ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் (2) ஆம் உட்பிரிவின்கீழ் தவணை தவறியவரால் செலுத்தப்படற்பாலதெனத் தீர்மானிக்கப்பட்ட வரித்தொகையை விஞ்சிய தாயிருக்கின்றவிடத்து, அத்தகைய விஞ்சுதொகை யானது தவணை தவறியவருக்கு மீளளிக்கப்படுதல் வேண்டும் :

ஆயின், இவ்வுட்பிரிவின் கீழான மீளளிப்பு எதுவும், (1) ஆம் உட்பிரிவின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் பயனாக அறவிடப்பட்ட வரியை விஞ்சுதலாகாது.

"முதன்மை அலுவலர் களிடமிருந்தும் ஏனையோரிட மிருந்தும் வரியை அறவிடுதல்.

10ஆ. (1) எந்த இயைபான சட்டத்தின்கீழ் தவணை தவறுகையிலுள்ள வரி விதிக்கப்படு கின்றதோ அந்த இயைபான சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு வருமதியாகவுள்ள தேதியன்று அல்லது அதற்குமுன்னர் கூட்டி ணைக்கப்பட்ட குழுவொன்று வரி எதனையும் செலுத்தியிராதவிடத்து, அத்தகைய கூட்டி ணைக்கப்பட்ட குழு தொடர்பிலான வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக உள்ளது எது எவ்வாறிருப்பினும், விடயத்திற்கேற்ப, அத்தகைய குழுவின் முகாமையாளர், செயலாளர், பணிப் பாளர் அல்லது முதன்மை அலுவலர்

ஆணையாளர் தலைமையதிபதி திருப்தியுறும் விதத்தில் முரணாக எண்பித்தாலன்றி அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முகாமையாளருக்கு, செயலாளருக்கு, எவரேனும் பணிப்பாளருக்கு அல்லது வேறு எவரேனும் முதன்மை அலுவலருக்கு எதிராக விடயத்திற்கேற்ப அத்தகைய முகாமையாளர், செயலாளர், பணிப்பாளர் அல்லது முதன்மை அலுவலர் அத்தகைய தவணை தவறுகைக்குப் பொறுப்பானவர் என்றாற்போன்று இச் சட்டத்தின் 10அ, 10ஆ, 10இ, 10ஈ, 10உ, 10ஊ அல்லது 10எ என்னும் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுத்தல் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்படாத ஆட்களின் குழுவொன்று விதிக்கப்பட்ட தவணை தவறுகையிலுள்ள வரி எச்சட்டத்தின் கீழ் உள்ளதோ அவ் இயைபான சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு உரிய தேதியன்று அல்லது அதற்கு முன்னர் வரி எதனையும் செலுத்தியிராதவிடத்து வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக உள்ளது எது எவ்வாறிருப்பினும் விடயத்திற்கேற்ப, அத்தகைய கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவின் எவரேனும் பங்காளர் அல்லது பதவி தாங்குநர் ஆணையாளர் தலைமையதிபதி திருப்தியுறும் வகையில் முரணாக எண்பித்தாலன்றி அத்தகைய தவணை தவறுகைக்கு அத்தகைய பங்காளர் அல்லது பதவிதாங்குநர் பொறுப்புடையவராவார் என்றாற்போன்று அத்தகைய கூட்டிணைக்கப்படாத குழுவின் எவரேனும் பங்காளருக்கு அல்லது பதவிதாங்குநருக்கு எதிராக இச்சட்டத்தின் 10அ, 10ஆ, 10இ, 10ஈ, 10உ, 10ஊ அல்லது 10எ என்னும் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுத்தல் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.".

கைப்பற்றுகை மற்றும் விற்பனை மூலம் வரியை அறவிடுதல்.

10இ. (1) ஆணையாளர் தலைமையதிபதியானவர் இச்சட்டத்தின்கீழ் வரிசேகரிப்போராக இருக்கவென ஆட்களை நியமிக்கலாம்.

(2) (அ) இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் தவணை தவறுகையிலுள்ள ஏதேனும் வரி இருக்குமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதியானவர், அத்தகைய வரியின் விவரங்களையும் தவணைதவறியவரின் பெயரையும் கொண்டுள்ள சான்றிதழொன்றை அரசாங்க அதிபருக்கு, உதவி அரசாங்க அதிபருக்கு, பிசுக்காலுக்கு, பிரதி பிசுக்காலுக்கு அல்லது வரிசேகரிப்பாளருக்கு வழங்கலாம். அத்துடன், எவ்வலுவலருக்கு அத்தகைய சான்றிதழ் வழங்கப்பட்டதோ அவ்வலுவலர் அச்சான்றிதழிற் பெயர் குறிக்கப்பட்டுள்ள தவணைதவறியவரிடமிருந்து, அவருடைய அசைவுள்ள ஆதனத்தைக் கைப்பற்றி விற்பனை செய்வதன்மூலம் அந்த வரியை அறவிடச் செய்வதற்குத் தத்துவமுடையராதல் வேண்டும் என்பதுடன் இத்தால் தேவைப்படுத்தவும்படுகின்றார்.

(ஆ) அசைவுள்ள ஆதனத்தின் கைப்பற்றுதலானது, அத்தகைய அலுவலர் அது தொடர்பாக மிக உசிதமானதெனக் கருதும் அத்தகைய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும் என்பதுடன், அசைவுள்ள ஆதனம் எதுவும் அத்தகைய அலுவலரினால் கைப்பற்றப்பட்டவுடன் அத்தகைய ஆதனத்தின் நிரல் ஒன்று தயாரிக்கப்பட்டு அவ்வலுவலரினால் கையொப்பமிடப்பட்டு தவணை தவறியவருக்குக் கொடுபடல் வேண்டும் என்பதுடன் அதன் பிரதி ஒன்று ஆணையாளர் தலைமையதிபதிக்கும் வழங்கப்படுதல் வேண்டும்.

(இ) அவ்வாறு கைப்பற்றப்பட்ட ஆதனம் -

(i) இலங்கை நாணயத்திலான காசாக விருக்குமிடத்து அத்தகைய காசு முதலில் கைப்பற்றுவதற்கான செலவுகளினதும் கட்டணங்களினதும் கொடுப்பனவுக்குப் பிரயோகிக்கப்படுதலும் வேண்டுமென்பதுடன் ஏதேனும் மீதி தவணை தவறுகை யிலுள்ள வரியைக் கொடுத்துத் தீர்ப்பதற்குப் பிரயோகிக்கப்படுதலும் வேண்டும் ;

(ii) வெளிநாட்டு நாணயக் காசாக இருக்குமிடத்து, அத்தகைய காசு மத்திய வங்கியில் அல்லது ஏதேனும் வாணிப வங்கியில் வைப்பிலிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அதிலிருந்து வரும் வருவாய்கள் கைப்பற்றுவதற்கான செலவுகளையும் விதிப்பனவுகளையும் கொடுப்பனவு செய்வதற்குப் பிரயோகிக்கப்படுதலும் அத்துடன் ஏதேனும் மீதி, தவணை தவறுகையிலுள்ள வரியைக் கொடுத்துத் தீர்ப்பதற்குப் பிரயோகிக்கப்படுதலும் வேண்டும் ; அத்துடன்

(iii) காசு தவிர்ந்த வேறு ஆதனமாக இருக்குமிடத்து, அத்தகைய ஆதனம் தவணைதவறியவரது, செலவிலும் விதிப்பனவிலும் ஐந்து நாட்களுக்கு வைத்திருக்கப்படுதல் வேண்டும். தவணைதவறியவர் இந்த ஐந்து நாட்களுக்குள்ளாக தவணை தவறிய வரியைச் செலவுகளுடனும் விதிப்பனவுகளுடனும் செலுத்தாவிடின், அரசாங்க அதிபர், உதவி அரசாங்க

அதிபர், பிசுக்கால், பிரதிப் பிசுக்கால் அல்லது வரிசேகரிப்பாளர் என்போர் அத்தகைய ஆதனத்தைப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படச் செய்தல் வேண்டும் அல்லது அத்தகைய ஆதனம் கைமாற்றத்தகு சாதனமொன்றாக அல்லது ஏதேனும் கூட்டுத் தாபனத்தில் அல்லது பகிரங்க கம்பனியிலுள்ள ஒரு பங்காகவிருக்குமிடத்து, அதனை அப்போதுள்ள சந்தை வீதப்படி தரகர் ஒருவர்மூலம் விற்கச் செய்தல் வேண்டும்.

(ஈ) (இ) என்னும் பந்தியின் உட்பந்தி (iii) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட விற்பனையினால் பெறப்பட்ட தொகை -

(i) முதலாவதாக ஆதனத்தைக் கைப்பற்றவும், வைத்திருக்கவும் விற்கவும் ஏற்பட்ட செலவுகளையும் விதிப்பனவுகளையும் கொடுப்பனவு செய்வதற்கும் ; அத்துடன்

(ii) இரண்டாவதாகத் தவணை தவறுகையிலுள்ள வரியைக் கொடுப்பதற்கும், பிரயோகிக்கப்பட வேண்டுமென்பதுடன் ஏதேனும் மீதி கைப்பற்றப்பட்ட ஆதனத்தின் சொந்தக்காரருக்கு கொடுக்கப்படுதலும் வேண்டும்.

(உ) ஆதனத்தின் கைப்பற்றுகை எதுவும் பயனுறுவில்லையென்பது எவ்வாறிருப்பினும் இப்பிரிவின்கீழ் அத்தகைய தவணை தவறிய

வருக்கெதிராக நடவடிக்கை எடுப்பதில் எவரேனும் அலுவலரால் உறப்பட்ட நியாயமான செலவுகளை அத்தகைய தவணை தவறியவரிடமிருந்து அறவிடுவது அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(ஊ) இவ்வுட்பிரிவில் "அசைவுள்ள ஆதனம்" என்னும் சொல்லமைப்பு தொழிற்சாலையொன்றின், நிலத்தில் பொருத்தப்பட்டுள்ள ஏதேனும் பொறித் தொகுதியை அல்லது எந்திரசாதனத்தை உள்ளடக்கும்.

(3) ஏதேனும் தவணைதவறுகையிலுள்ள வரி மற்றும் (2) ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட வழிகள் மூலம் அறவிடுதல், செயற்படுத்தமுடியாதென அல்லது உசிதமானதல்லவென ஆணையாளர் தலைமையதிபதி அபிப்பிராயப்படுமிடத்து, அத்தகைய வரியின் விவரங்களையும் அவ்வரி எவ்வாளால் அல்லது ஆட்களால் பெறப்படற்பாலதானதோ அவ்வாளின் அல்லது ஆட்களின் பெயரையும் அல்லது பெயர்களையும் கொண்டுள்ள சான்றிதழொன்றை அத்தவணை தவறியவர் வதியும் அல்லது தவணை தவறியவருக்குச் சொந்தமான அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனம், ஆதனம் அமைந்திருக்கும் ஏதேனும் மாவட்டத்தில் நியாயாதிக்கம் கொண்டுள்ள ஒரு மாவட்ட நீதிமன்றத்திற்கு அவர் வழங்கலாம். அத்துடன் அதன்மேல் அந்த நீதிமன்றம், அத் தவணைதவறியவரின் அசைவுள்ளனவும் அசைவற்றனவுமான ஆதனங்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதையேனும் அல்லது வரி அறவிடுவதற்கு அவசியமானதென அவர் கருதக்கூடிய அதன் அத்தகைய பாகத்தினைக் கைப்பற்றுவதற்கும் விற்பதற்கும்

அதிகாரமளித்தும் அவரைத் தேவைப்படுத்தியும் நிறைவேற்றெழுத்தாணையொன்றைப் பிசுக்காலுக்கு வழங்குவதற்குப் பணித்தல் வேண்டும். அத்துடன் (101ஆம் அத்தியாயமான) குடியியல் வழக்கு நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 226 முதல் 297 வரையிலான பிரிவுகளின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன் அத்தகைய கைப்பற்றுதலுக்கும் விற்பனைக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) ஆணையாளர் தலைமையதிபதியானவர் இப்பிரிவின் கீழ் சான்றிதழொன்றை வழங்கும் போதெல்லாம், அதுபற்றிய அறிவிப்பொன்றை நேரடியாகச் சேர்ப்பிப்பதன்மூலம், தபால்மூலம் அனுப்பப்படும் பதிவுக் கடிதமூலம் அல்லது தந்தி மூலம் வதிவுள்ளவராயினுஞ்சரி அல்லது வதி வற்றவராயினுஞ்சரி, அத்தவணை தவறியவருக்கு அதே நேரத்தில் வழங்குதல் வேண்டும். ஆனால் தவணை தவறியவரினால் அத்தகைய அறிவித்தல் பெற்றுக் கொள்ளப்படவில்லை என்பது இப்பிரிவின் கீழான நடவடிக்கைகளைச் செல்லுபடியற்றதாக்குதலாகாது.

*நீதிவான் முன்னரான அறவீட்டுக்கான நடவடிக்கைகள்.*

10ஈ. (1) ஏதேனும் விடயத்தில் தவணை தவறுகையிலுள்ள வரியை, கைப்பற்றுதல் மூலமும் விற்பனை மூலமும் அறவிடுதல் செய்யப்பட முடியாதென அல்லது உசிதமானதல்லவென ஆணையாளர் தலைமையதிபதி அபிப்பிராயப்படுமிடத்து, அல்லது அவ்வரியின் முழுத் தொகையும் கைப்பற்றுதல் மூலமும் விற்பனை மூலமும் அறவிடப்படாதவிடத்து அவர், அத்தகைய வரி பற்றிய விவரங்களும் தவணை தவறியவரின் பெயரும் கடைசியாக இருந்ததாக அறியப்பட்ட அவரது வியாபார இடமும் அல்லது வதிவிடமும் அடங்கிய சான்றிதழொன்றை, அவ்விடம் அமைந்துள்ள பிரிவில் நியாயாதிக்கங்கொண்டுள்ள

நீதிவானொருவருக்கு வழங்கலாம். அதன்மேல் அந்நீதிவான், அவருக்கெதிராக அவ்வரியை அறவிடுவதற்காக ஏன் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படலாகாதென்பதற்கும் காரணம் காட்டுமாறு அத்தவணை தவறியவரை அவர் முன்பாகக் கட்டளையிட்டழைத்துக் கேட்டல் வேண்டுமென்பதுடன் போதிய காரணம் காட்டத் தவறும்பட்சத்தில் தவணை தவறியவர் குற்றப் பணத்தினால் மட்டும் தண்டிக்கக்கூடிய அல்லது மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படற்பால தாகாத தவறொன்றுக்காக அத்தகைய தவணை தவறியவர் மீது நீதிவானின் தண்டனைத் தீர்ப்பின் மூலம் விதிக்கப்பட்ட குற்றப்பணமாகக் கருதப்படல் வேண்டும். அத்துடன் அத்தகைய தவறொன்றுக் காக விதிக்கப்படும் குற்றப்பணத்தைச் செலுத்தத் தவறுதல் தொடர்பாக, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 291 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அதன் (அ), (ஈ), மற்றும் (ஐ) என்னும் பந்திகள் தவிர்ந்த) ஏற்பாடுகள் அதன் மேல் ஏற்புடையனவாதல் வேண்டுமென்பதுடன் நீதிவான் அத்தகைய மறியற் தண்டனையை விதிக்கும் நேரத்தில் அவ்வுட்பிரிவின் ஏற்பாடு களின் மூலம் எவையேனும் பணிப்புகளைச் செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக ஆணையாளர் தலைமையதிபதியால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றிலுள்ள ஏதேனும் கூற்றின் செம்மைத் தன்மை இப்பிரிவின் கீழான ஏதேனும் நடவடிக்கையின்போது நீதிவானால் கேள்விக் குட்படுத்தப்படுதல் அல்லது விசாரிக்கப்படுதல் ஆகாது. அத்துடன் அதற்கிணங்க, அவ்வுட்பிரி விலுள்ள எதுவும் அத்தகைய சான்றிதழிலுள்ள ஏதேனும் கூற்றின் செம்மையைச் சீர்தூக்கிப் பார்க்க அல்லது முடிவுசெய்ய அல்லது எந்த

வரிமதிப்பீடு தொடர்பாகத் தவணைதவறிய வரி விதிக்கப்படுகின்றதோ அவ்வரி மதிப்பீட்டுக் கெதிரான, மேன்முறையீடொன்று முடிவுறா திருக்கின்றதென்ற ஒரே காரணத்திற்காக அத்த கைய நடவடிக்கையை முப்பது நாட்களை விஞ்சும் காலமொன்றுக்கு ஒத்திவைக்க அல்லது பின்போட நீதிவானொருவருக்கு அதிகாரமளிப்பதாக வாசித்த பொருள் கொள்ளப்படுதலாகாது.

(3) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 291 ஆம் பிரிவின் (2) முதல் (5) வரை யிலான உட்பிரிவுகளிலுள்ள எதுவும், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் விடயத்திற்கு ஏற்புடையதாதலாகாது.

(4) தவணை தவறியவர் மீது விதிக்கப்பட்ட தென (1) ஆம் உட்பிரிவினால் கருதப்பட்ட குற்றப் பணத்தைக் கொடுப்பனவு செய்வதில் தவறியதாகத் தவணைதவறியவருக்கு மறியற்றண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்ட அவ்வுட்பிரிவினால் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் விடயத்தில், நீதிவான் அக் குற்றப்பணத் தொகையைக் கொடுப்பனவு செய்வதற்கெனக் காலஅவகாசமளிக்கலாம் அல் லது அத்தொகை தவணைக் கட்டணமாகக் கொடுப் பனவு செய்யப்பட வேண்டுமெனப் பணிக்கலாம்.

(5) ஓராம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட் டுள்ளவாறு அதன் கீழ்க் காரணம் காட்டுவதற்கு அதன்கீழ் அல்லது (4) ஆம் உட்பிரிவின்கீழ் குற்றப்பணம் கொடுப்பனவு செய்வதற்கு கால அவசகாசமளிப்பதற்கு முன் நிபந்தனையாகப் பிணை கொடுக்கப்பட வேண்டுமென நீதிமன்றம் தேவைப்படுத்தப்படலாம் ; அத்துடன் தவணை தவறியவர் அவ்வாறு பிணைகொடுக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுமிடத்து, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை சட்டத்தின் XXXIV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள் ஏற்புடை யனவாதல் வேண்டும்.

(6) நீதிவான் ஒருவர், (4) ஆம் உட்பிரிவின் கீழான கொடுப்பனவு ஒன்று தவணைப் பணங்களாக செலுத்தப்பட வேண்டும் எனப் பணித்து, ஏதேனும் ஒரு தவணைக் கட்டணத்தைக் கொடுப்பனவு செய்வதில் தவணை தவறப்படுமிடத்து, அப்பொழுது கொடுபடாது எஞ்சியிருக்கும் எல்லாத் தவணைக் கட்டணங்களையும் கொடுப்பனவு செய்வதில் தவணைதவறப்பட்டாற் போன்று நடவடிக்கைகள் எடுக்கப்படலாம்.

(7) ஓராம் உட்பிரிவின் கீழான ஏதேனும் நடவடிக்கையில், ஆணையாளர் தலைமையதிபதியின் சான்றிதழானது, வரியானது முறைப்படி வரி மதிப்பீடுசெய்யப்பட்டதென்பதற்கும் தவணை தவறியதென்பதற்கும் போதிய சான்றாதல் வேண்டுமென்பதுடன், வரியானது மிகையாகவுள்ளது, சரியானதல்ல அல்லது மேன்முறையீடு செய்யப்பட்டது போன்ற வழக்குரையெதுவும் ஏற்றுக்கொள்ளப்படுதலுமாகாது.

(8) இப்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தவணை தவறிய வரியானது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றினால் அல்லது கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவொன்றினால் செலுத்தப்படாதவிடத்து அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முகாமையாளர், செயலாளர், எவரேனும் பணிப்பாளர் அல்லது வேறு எவரேனும் முதன்மை அலுவலர் அல்லது அத்தகைய கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவின் எவரேனும் பங்காளர் அல்லது பதவிதாங்குநர் விடயத்துக்கேற்ப இப்பிரிவின் கீழான நீதிவானின் தண்டனைத் தீர்ப்பொன்றினால் விதிக்கப்படும் குற்றப்பணத்துக்கு மேலதிகமாக நீதிவான் முன்னரான சுருக்கமுறை விசாரணையின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் மூன்று மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு ஆளாதல் வேண்டும்:

ஆயின், விடயத்துக்கேற்ப, அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அத்தகைய முகாமையாளர், செயலாளர், எவரேனும் பணிப்பாளர் அல்லது வேறு முதன்மை அலுவலர் அல்லது அத்தகைய கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவின் எவரேனும் பங்காளர் அல்லது பதவிதாங்குநர் அத்தகைய தவறுகைக்கு அவர் பொறுப்புடையவர் அல்லர் அல்லது அத்தகைய வரியின் தவணை தவறுகையைத் தடுப்பதற்காக அவருடைய தத்துவத்துக்குள் அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துள்ளார் என்பதற்கான காரணத்தைக் காட்டுதல் வேண்டும்.

கடன்கள் முதலிய வற்றிலிருந்து வரி அறவிடுதல்.

10உ. (1) இச்சட்டத்துக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் சட்டங்களின் கீழ் எவரேனும் ஆளினால் செலுத்தப்படற்பாலதான வரி தவறுகையில் இருக்குமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதியானவர் 10அ, 10ஆ, 10இ மற்றும் 10ஈ என்னும் பிரிவுகளின் நியதிகளின்படி தவணைதவறுகையிலுள்ள வரியை அறவிடுதலானது செயல்முறைக்கு உகந்தது அல்ல அல்லது உசிதமானதல்ல என அபிப்பிராயப்படுமிடத்து,

(அ) தவணைதவறியவருக்கு அல்லது அவரது முகவருக்குப் பணம் செலுத்த வேண்டியுள்ளாரென அல்லது செலுத்தவுள்ளாரென ;

(ஆ) தவணைதவறியவரின் அல்லது அவரது முகவருக்காக அல்லது முகவரின் நிமித்தம், பணம் வைத்திருக்கினறாரென;

(இ) தவணைதவறியவருக்கு அல்லது அவரது முகவருக்குக் கொடுப்பனவு செய்வதற்காக வேறு ஆளின் நிமித்தம் கணக்கில் பணம் வைத்திருக்கின்றாரென ; அல்லது

(ஈ) தவணைதவறியவருக்கு அல்லது அவரது முகவருக்குப் பணம் கொடுப்பதற்காக வேறெவரேனும் ஆளிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ளாரென,

ஆணையாளர் தலைமையதிபதிக்குத் தோன்று மிடத்து ஆணையாளர் தலைமையதிபதியானவர் தவணை தவறுகையிலுள்ள வரித்தொகையை விஞ்சாத அத்தகைய எவையேனும் பணங்களை அத்தகைய அறிவித்தலின் பெயர்குறிக்கப்பட்ட அலுவலருக்குக் கொடுக்குமாறு அவரைத் தேவைப் படுத்தி எழுத்திலான அறிவித்தலை (அதன் பிரதி யொன்று தவணைதவறியவருக்குத் தபால்மூலம் அனுப்பப்படுதல் வேண்டும்) அத்தகைய வேறு ஆளுக்குக் கொடுக்கலாம். அறிவித்தலானது, அத்தகைய அறிவித்தல் கிடைக்கப்பெற்ற திகதியில் அவரிடமுள்ள அல்லது அவரால் பெறப்பட வுள்ள அல்லது அத்தகைய அறிவித்தல் தேதியின் பின்னரான மூன்று மாத காலப்பகுதிக்குள்ளாக எந்நேரத்திலும் அவருக்குக் கிடைத்துள்ள அல்லது அவரிடமிருந்து செலுத்தப்படவுள்ள அல்லது அவரால் கொடுபடவுள்ள அத்தகைய எல்லாப் பணங்களுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) ஆளொருவர், தவணைதவறியவருக்காக அல்லது அவர்களின் பொருட்டு பணத்தை வைத்திருக்குமிடத்தும் (இப்பிரிவில் ''கூட்டுக் கணக்கு வைத்திருப்பவர் அல்லது வைத்திருப் பவர்கள்'' எனக் குறிப்பீடுசெய்யப்படுவரான) வேறெவரேனும் ஆளுக்காக அல்லது கூட்டாக வுள்ள ஆட்களுக்காக எந்தக் கூட்டுக்கணக்கு தவணைதவறியவரால் செலுத்தப்பட்ட உதவு தொகைகளுக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதென ஆணையாளர் தலைமையதிபதி திருப்திப்பட் டாரோ அத்துடன் ஆணையாளர் தலைமையதி பதியினால் அவ்வாறு சான்றுப்படுத்தப்பட்

டுள்ளதோ, அந்தக் கூட்டுக்கணக்கிலுள்ள பணங்களிலிருந்து அல்லது அத்தகைய பணங்களின் அத்தகைய பாகத்திலிருந்து தவணைதவறுகையிலுள்ள தொகையை அல்லது அதன் பாகத்தை (1) ஆம் உட்பிரிவின் கீழான ஓர் அறிவித்தலில் பெயர் குறிக்கப்பட்ட அலுவலருக்குச் செலுத்துமாறு அத்தகைய தேவைப்படுத்துகின்ற தான அறிவித்தலொன்றை அத்தகைய ஆளுக்கு ஆணையாளர் தலைமையதிபதியானவர் கொடுக்கலாம் :

ஆயின் –

(அ) ஓராம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலுக்கிணங்க பணத்தை அனுப்பி வைக்கின்றவரான ஆளொவ்வொருவரும் ஏனைய கூட்டுக்கணக்கு வைத்திருப்பவரொவ்வொருவருக்கும் அத்தகைய நிகழ்வு பற்றி அறிவித்தல் வேண்டும்;

(ஆ) தவணைதவறியவர் தவிர்ந்த கூட்டுக் கணக்கு வைத்திருப்பவர் ஒவ்வொருவரும், எந்தத் தேதியன்று (அ) என்னும் பந்தியின் கீழ் அறிவிப்பொன்றைப் பெற்றுக்கொள்கின்றாரோ அந்தத் திகதியிலிருந்து இரண்டு கிழமைகளுக்குள், ஆணையாளர் தலைமையதிபதியால் அறிவித்தல் வழங்கப்பட்ட திகதியிலுள்ளவாறாக அத்தகைய கூட்டுக்கணக்கில் உள்ள மிகுதிக்கான தேறிய உதவுதொகையைக் குறித்து நிற்கின்ற அத்தகைய அனுப்பு தொகையின் ஏதேனும் பாகம் தொடர்பில் உரிமைக் கோரிக்கையொன்றை ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செய்யலாமென்பதுடன், ஆணையாளர் தலைமையதிபதியானவர், அத்தகைய உரிமைக்கோரிக்கையைச் சீர்தூக்கிப் பார்த்தும், அத்துடன் அதன் மீது கட்டளையை ஆக்குதலும் வேண்டும் ;

(இ) பந்தி (ஆ) என்பதன் கீழ் ஆணையாளர் தலைமையதிபதியால் கட்டளையினால் இன்னலுறும் கூட்டுக்கணக்கு வைத்திருப்பாளர் ஒவ்வொருவரும், அவரால் கொடுக்கப்பட்ட உதவுதொகைகளுக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதாக அவர் உரிமை கோருகின்றதான அத்தகைய பணத்தை அல்லது அத்தகைய பணத்தின் பாகத்தை அறவிடுவதற்கான கட்டளையொன்றை நாடுகின்ற வழக்கை மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கலாம்.

(3) (68 ஆம் அத்தியாயமான) காலவிதிப்புக் கட்டளைச் சட்டத்திலுள்ள ஏதேனும் ஏற்பாடு எவ்வாறிருப்பினும், ஆணையாளர் தலைமையதிபதியால் அறிவித்தல் வழங்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடைந்த பின்னர் அத்தகைய பணத்தின் அல்லது அத்தகைய பணத்தினது பாகத்தின் அறவீட்டுக்கான வழக்கு எதுவும் தொடுக்கப்படுதலாகாது.

(4) இப்பிரிவினைப் பின்பற்றி ஏதேனும் கொடுப்பனவைச் செய்துள்ள எவரேனும் ஆள், தவணைதவறியவரின் சம்பந்தப்பட்ட மற்றைய எல்லா ஆட்களினதும் அதிகாரத்தின்கீழ் செயலாற்றியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் எழுத்திலான ஏதேனும் சட்டத்தின், ஒப்பந்தத்தின் அல்லது உடன்படிக்கையின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அத்தகைய கொடுப்பனவு தொடர்பாக எல்லாக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளுக்கு எதிராகவும் இத்தால் காப்பீடு செய்யவும்படுகின்றார்.

(5) ஓராம் உட்பிரிவின் கீழ் அறிவித்தல் கொடுக்கப்பட்டு அவ்வுட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பணங்கள் அவரது கைக்கு வராத அல்லது அவ்வுட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அக்காலப்பகுதிக்குள்ளாக அவரிடமிருந்து வருமதி

யாகவிராத காரணத்தினால் அதற்கு இணங்கி யொழுக முடியாத எவரேனும் ஆள், அது முடி வடைந்ததன் பின்னர் பதினான்கு நாட்களுக் குள்ளாக, அந்நிகழ்வுகள் பற்றி ஆணையாளர் தலைமையதிபதிக்குத் தெரிவித்து, எழுத்திலான அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(6) ஓராம் உட்பிரிவின்கீழ் அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ள எவரேனும் ஆள், அதற் கிணங்கியொழுகவியலாதிருந்து (5) ஆம் உட் பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் கொடுக்கத் தவறுமிடத்து அல்லது அத்தகைய ஆள் அவ்வறி வித்தல் தொடர்புறுத்தும் வரித்தொகையை அல்லது அவ்வாள், அறிவித்தல் தொடர்புறுத்தும் வரியை அல்லது அதன் ஏதேனும் பாகத்தைக் கழித்து அல்லது கழிக்கக்கூடியவராயிருந்து (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட காலப் பகுதி முடிவடைந்ததன் பின்னர் பதினான்கு நாட்களினுள், அத்தகைய வரித்தொகையை அல் லது அதன் பாகத்தை ஆணையாளர் தலைமை யதிபதியால் தேவைப்படுத்தப்பட்டவாறு கொடுக் காதவிடத்து, அவ்வாள் தனியாளொருவரெனின், அவர் அல்லது அத்தகைய ஆள் கூட்டிணைக் கப்பட்டதாயினுஞ்சரி, கூட்டிணைக்கப்படாத தாயினுஞ்சரி ஒரு கம்பெனியாக அல்லது ஆட்கள் குழுவாக இருக்குமிடத்து, அத்தகைய கம்பெனியின் அல்லது குழுவின் செயலாளர், முகாமையாளர் அல்லது வேறு முதன்மை அலுவலர், அவ்வாள் கழிக்க வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டுள்ள வரி முழுவதற்கும் நேரடியாக பொறுப்பாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வரி விடயத் திற்கேற்ப, அத்தகைய தனியாளிடமிருந்து, செயலாளரிடமிருந்து,முகாமையாளரிடமிருந்து அல்லது வேறு முதன்மை அலுவலரிடமிருந்து இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்ட எவையேனும் வழிவகைகளாலும் அறவிடப்படலாம்.

(7) இப்பிரிவின் நோக்கத்துக்காக,"தவணை தவறியவர்" என்னுஞ் சொல்லமைப்பு தவணை தவறுகையிலுள்ள ஆளொருவரின் முகவரையும் உள்ளடக்குவதாகக் கருதப்படல் வேண்டுமென்பதுடன், இப்பிரிவின் ஏற்பாடுகள் எவரேனும் ஆளினால் அவர் உயிருடனிருந்தால் கொடுபடற்பாலதாகக் கூடிய வரிசெலுத்தப்படாதிருக்கும் ஏதேனும் விடயத்திற்கும் ஏற்புடையதாதல் வேண்டும். அத்துடன் அத்தகைய ஏதேனும் விடயத்தில் அவ்வேற்பாடுகளை ஏற்புடையதாக்கும் நோக்கங்களுக்காக (1) ஆம் உட்பிரிவில் "தவணை தவறியவர்" என்னுஞ் சொல்லமைப்பு -

(அ) மரணமெய்திய ஆளொருவரது மரண சாதன நிறைவேற்றுநர் அல்லது நிருவாகி ;

(ஆ) மரணமெய்திய ஆளொருவரின் ஆதனத்தை உடைமையில் எடுக்கும் அல்லது அவ்வாதனத்தில் தலையிடும் எவரேனும் ஆள் ; அல்லது

(இ) மரணமெய்திய ஆளொருவரது மரணச் சொத்துத் தொடர்பான மரணசாதன அதிகாரப்பத்திரம் அல்லது மரணச் சொத்து நிருவாகத் தத்துவப்பத்திரம் வழங்குவதற்காக அல்லது மீள இலச்சினையிடப்படுவதற்காக ஒரு மாவட்ட நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்துள்ள அல்லது விண்ணப்பிக்க உரித்துடைய எவரேனும் ஆள்,

எனப் பொருள்படும்.

காசாக வரியைச் செலுத்துவதற்குப் பதிலாக அரசாங்கத்துக்கு அசையாத ஆதனத்தைக் கைமாற்றுதல்.

*10ஊ*. (1) இச்சட்டத்தின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் சட்டங்களின் கீழ் தவறுகையிலுள்ள வரியைச் செலுத்துவதற்குப் பொறுப்பான எவரேனும் ஆள், அத்தகைய வரியைக் காசாகக் கொடுப்பதற்குப் பதிலாக, அவ்வாளுக்கும் ஆணையாளர் தலைமையதிபதிக்கும் இடையேயான உடன்படிக்கைமூலம் அத்தகைய ஆதனத்தின் மீது வைக்கப்பட்டுள்ள

அத்தகைய பெறுமதியின்படி, அத்தகைய ஆளினால் சொந்தமாக வைத்திருக்கப்படும் அசைவற்ற ஏதேனும் ஆதனத்தை அரசாங்கத்துக்குக் கைமாற்றுவதற்காக ஆணையாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பிக்கலாம். அத்துடன், ஆணையாளர் தலைமையதிபதியானவர் அரசாங்கத்துக்கு அத்தகைய ஆதனம் கைமாற்றப்பட்டதன் பின்னர் அதனை முகாமைசெய்வதற்குள்ள வசதிவாய்ப்பினைக் கருத்திற்கொண்டு அத்தகைய விண்ணப்பத்தை அனுமதிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விண்ணப்பத்தை ஆணையாளர் தலைமையதிபதி அனுமதித்துள்ளவிடத்தும், எவ்வாதனம் தொடர்பாக விண்ணப்பஞ்செய்யப்பட்டதோ அவ்வாதனத்தின் பெறுமதி என அவ்வுட்பிரிவினது ஏற்பாடுகளுக்கிணங்க உடன்பட்டுக் கொள்ளப்பட்ட தொகையானது, விண்ணப்பகாரரினால் கொடுபடற்பாலதான வரித்தொகையை விஞ்சுகின்றவிடத்தும் மிகைத்தொகையானது, விண்ணப்பகாரரினால் இலங்கை அரசாங்கத்துக்குச் செய்யப்பட்ட 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 34 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கருத்துக்குட்பட்ட நன்கொடை ஒன்றெனக் கருதப்படல் வேண்டும்.

தவணை தவறுகையிலுள்ள வரி ஊழியரின் ஊதியத்திலிருந்து அறவிடப்படுதல்.

10எ. (1) ஆணையாளர் தலைமையதிபதியானவர், ஊழியர் ஒருவரின் தொழில்தருநர் எவருக்கேனும் அல்லது ஊழியர் ஒருவரின் ஊதியத்தைக் கொடுப்பதற்குப் பொறுப்புள்ளவரான ஆளெவருக்கேனும் எழுத்திலான அறிவித்தல் மூலம், அத்தகைய தொழில்தருநரை அல்லது ஆளை, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியின்போது அத்தகைய ஊழியரின் ஊதியத்திலிருந்து அத்தகைய

ஊழியரினால் கொடுக்கற்பாலதானதும் தவணை தவறுகையிலுள்ள வரித்தொகையினை, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையுள்ள மாதாந்தத் தவணைக் கட்டணங்களாகக் கழிக்குமாறு பணிக்கலாம். ஊழியர் ஒருவரின் ஊதியத்திலிருந்து ஒவ்வொரு மாதமும் கழிக்கப்படுவதான தொகை, விடயத்திற்கேற்ப, அத்தகைய தொழில்தருநரால் அல்லது அத்தகைய ஆளினால் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஊழியர் ஒருவரின் ஊதியத்திலிருந்து (1) ஆம் உட்பிரிவின் கீழ், அவரது தொழில் தருநரால் அல்லது அத்தகைய ஊதியத்தைக் கொடுப்பதற்குப் பொறுப்பாகவுள்ள ஆளினால், வரி எதுவும் கழிக்கப்படுமிடத்து, அத்தகைய ஊழியர், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, அத்தகைய வரியை அல்லது அதன் பாகத்தை கழிப்பனவு செய்யப்பட்ட தேதியன்று செலுத்திய தாகக் கருதப்படல் வேண்டும்.

(3) ஆணையாளர் தலைமையதிபதியானவர், (1) ஆம் உட்பிரிவின் கீழான பணிப்பினை வழங்கியதன் பின்னர், ஊழியர், ஆணையாளர் தலைமையதிபதி திருப்திப்படுமாறு தவணை தவறுகையிலுள்ள அவரது வரியினைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தால், தொழில்தருநருக்கு அல்லது ஊழியரின் ஊதியத்தைக் கொடுப்பதற்குப் பொறுப்பாளியாக உள்ள ஆளுக்கு எழுத்திலான அறிவித்தலைக் கொடுப்பதன்மூலம் அத்தகைய பணிப்பினை முழுமையாக அல்லது பகுதியளவில் மீளப்பெறலாம்.

(4) அவரின் ஊதியத்திலிருந்து ஏதேனும் தவணை தவறுகையிலுள்ள வரியானது, அவரின் தொழில்தருநரால் அல்லது அத்தகைய ஊதியத்

தினைக் கொடுப்பதற்குப் பொறுப்பாளியாக உள்ள ஆளினால் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் கழிக்கப்பட இருப்பவரான எவரேனும் ஊழியர், அவரது ஊழியத்தை விட்டுவிட எதிர்பார்க்குமிடத்து அல்லது விடுமிடத்து, தொழில்தருநர் அல்லது அத்தகைய ஆள், ஆணையாளர் தலைமையதிபதியினால் அவருக்குக் கொடுக்கப்பட்ட அறிவித்தலினால் கழிக்கப்பட வேண்டும் எனப் பணிக்கப்பட்டதான அத்தகைய வரியின் முழுத்தொகையையும் அல்லது வரியின் ஏதேனும் பாகத்தை, அத்தகைய ஊழியர் அவரின் ஊழியத்தினை விட்டுவிடுகிறார் அல்லது விட்டுவிட்டார் என அவர் அறிந்து கொண்டதன் பின்னர் அவருக்குக் கொடுமதியாகவுள்ள எல்லா அல்லது எவையேனும் கொடுப்பனவு களிலிருந்து கழித்தல் வேண்டும்.

(5) ஊழியர் ஒருவரின் ஊதியத்திலிருந்து வரி எதனையும் கழிப்பதற்கான பணிப்பு ஒன்று (1) ஆம் உட்பிரிவின் கீழ் அவரின் தொழில்தருநருக்கு அல்லது அத்தகைய ஊதியத்தினைக் கொடுப்பதற்குப் பொறுப்பானவராக உள்ள ஆளுக்குக் கொடுக்கப்பட்டு அத்தகைய ஊழியர் அவர் ஊழியத்தை விட்டுவிட்டார் என்ற காரணத்தினால் அல்லது வேறு ஏதேனும் காரணத்தினால் அத்தகைய தொழில்தருநர் அல்லது ஆள் அத்தகைய வரி முழுவதையும் அல்லது ஏதேனும் பாகத்தினைக் கழிக்க முடியாதிருக்குமிடத்தும் அத்தகைய தொழில்தருநர் அல்லது ஆள், உடனடியாக, ஆணையாளர் தலைமையதிபதிக்கு விடயத்தின் நிகழ்வுகளைப் பற்றி அறிவிப்பதான அறிவித்தலை எழுத்தில் வழங்குதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய தொழில்தருநர் அல்லது ஆள் கழித்திராததான அல்லது கழிக்க முடியாததான வரி எதுவும், உடனடியாக ஊழியரால் செலுத்தற்பாலதாக வருதலும் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட எவையேனும் வழிவகைகளின்மூலம் அறவிடப்படுதல் வேண்டும்.

(6) தொழில்தருநர் அல்லது ஊழியர் ஒருவருக்கு ஊதியத்தைக் கொடுப்பதற்குப் பொறுப்பாளராக உள்ள ஆள், (1) ஆம் உட்பிரிவின் கீழ் அத்தகைய ஊதியத்திலிருந்து ஏதேனும் வரியினைக் கழிக்குமாறு பணிக்கப்பட்டிருந்தும் ஏதேனும் வரியினைக் கழிக்கத் தவறுமிடத்தும், அத்தகைய தொழில்பெறுநர் அல்லது ஆள் அத்தகைய கழிவானது செய்திருக்கப்படவேண்டியதான திகதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள்ளாக (5) ஆம் உட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்ட வாறாக ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் கொடுக்கத் தவறுமிடத்தும் அல்லது அத்தகைய தொழில்தருநர் அல்லதுஆள், (1) ஆம் உட்பிரிவின் கீழான பணிப்புக்கு இணங்க, அத்தகைய ஊழியத்திலிருந்து ஏதேனும் மாதத்தில் கழித்திருக்குமிடத்து அல்லது கழித்திருக்கக்கூடு மிடத்தும் ஆனால் அத்தகைய வரித்தொகையினை ஆணையாளர் தலைமையதிபதிக்குத் தொடர்ந்து வரும் மாதத்தின் பதினைந்தாம் நாட்களுக்குள் ளாகச் செலுத்தாதிருந்தால், அத்தகைய தொழில் தருநர் அல்லது ஆள் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத, கம்பெனி ஒன்றாக அல்லது ஆட்கள் குழுவாக இருந்தால், அத்தகைய கம்பெனியின் அல்லது குழுவின் செயலாளர், முகாமையாளர் அல்லது வேறு முதன்மை அலு வலர், இப்பிரிவின் கீழ் அத்தகைய தொழில்தருநர் அல்லது அத்தகைய ஆள், கழிக்குமாறு பணிக் கப்பட்டதுமான வரி முழுவதற்கும் அவரே பொறுப்புடையவராதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வரியானது, இச்சட்டத்தின் ஏற்பாடு செய்யப்பட்ட எவையேனும் வழிகளில் அத்தகைய தனியாளிடமிருந்து, செயலாளரிடமிருந்து, முகாமையாளரிடமிருந்து அல்லது வேறு முதன்மை அலுவலரிடமிருந்து அறவிடப்படலாம் என்பதுடன் அத்தகைய வரியானது தவணை தவறியதாகவே கருதப்படுதல் வேண்டும்.

(7) ஓராம் உட்பிரிவின் கீழான பணிப்புக்கு இணங்க ஊழியர் எவரினதும் ஊதியத்திலிருந்து வரியினைக் கழிப்பவரான தொழில்தருநர் அல்லது வேறு ஆள் ஒவ்வொருவரும், அத்தகைய ஊழியரால் செய்யப்பட்ட வேண்டுகோளின்பேரில், ஆணையாளர் தலைமையதிபதியால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் கழிக்கப்பட்ட வரித்தொகை பற்றிய சான்றிதழ் ஒன்றினை அவருக்கு வழங்குதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

4. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்